# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 101/மா/2022**
**நாள் : 15.09.2022**

திரு.V.சுதாகர்,
தஞ்சாவூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி, தஞ்சாவூர் – எதிர்மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், மருத்துவக்கல்லூரி சாலை, சுந்தரம் நகர விரிவாக்கம், திருப்பதி நகர், மனை எண். 63 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.சுதாகர் என்பவரின் 27.06.2022 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.06.2022-ல் பெறப்பட்டு 101/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர், மருத்துவக்கல்லூரி சாலை, சுந்தரம் நகர் விரிவாக்கம், திருப்பதி நகர், மனை எண். 63 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. சுதாகர் என்பவர் தனது முறையீட்டுமனுவில் தான் தஞ்சாவூர் மாநகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளதாகவும், கடந்த 2.7.2021 அன்று தனக்கு ஐந்து வேலை உத்தரவுகள் ரூபாய் 34 லட்சத்திற்கு வழங்கப்பட்டது என்றும் அதே தேதியில் மேலும் சில ஒப்பந்ததாரர்களுக்கு மோட்டார் பழுது பார்க்கும் பணி மற்றும் குடிநீர் குழாய் பழுது பார்க்கும் பணி வேலை உத்தரவுகள் வழங்கப்பட்டு பணி நடைபெற்றுக்கொண்டு வந்தது என்றும் கடந்த 17.07.2021 அன்று திரு.சரவணகுமார் என்பவர் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையராக பதவியேற்றுக் கொண்டார். அன்றுமுதல் தனக்கு வேண்டியவரை பினாமியாக AB எலக்ட்ரிகல்ஸ் கோயம்புத்தூர் உரிமையாளர் A. பாஸ்கர் என்பவரை அழைத்து வந்து விட்டார் எனவும் முதலில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணி செய்து வந்து ஒப்பந்ததாரரை வாய்மொழியாக பணி செய்ய வேண்டாம் என கூறிவிட்டு, தனது பினாமியான AB எலக்ட்ரிகல்ஸ் கோயம்புத்தூர் உரிமையாளர் A.பாஸ்கர் தஞ்சாவூர் மாநகராட்சியில் அன்றைய தேதியில் ஒப்பந்ததாரராக இல்லாதவர், மேலும் இவருக்கு பாதாள சாக்கடை பணி தொடர்பான அனுபவமும் இல்லாதவருக்கு எவ்வித நாளிதழ் விளம்பரமும்

இல்லாமல் ஆன்லைனிலும் டெண்டர் பதிவு ஏற்றாமல் ஒரு மாதத்திற்கு பணி கொடுத்து பின்பு மேலும் ஒரு மாதத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. 5.10.2021 அன்று ஆணையர் அவர்கள் தன்னையும் மேலும் சில ஒப்பந்ததாரர்களையும் நேரில் அழைத்து, வாய்மொழியாக பணி செய்ய வேண்டாமென கூறிவிட்டார் எனவும் பணி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே பணி தொடர்பான புகார் ஏதும் இல்லாதபோதே, எந்தவிதமான அறிவிப்பும் கொடுக்காமல் தனது பினாமிக்கு பணி கொடுக்க தங்களை பணி செய்ய வேண்டாமென கூறிவிட்டதாகவும் தான் பணி செய்த விவரங்கள் குறித்த ஆவணங்களையும் இணைத்துள்ள அவர் தான் செய்த பணிகளுக்கு அளவீட்டு புத்தகம் எழுதி பணம் கொடுக்கும் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் பணிகள்முடிவடையும் முன்பே புதியதாக 23.11.2021 அன்று சில பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதில் ரூபாய் 2 கோடியே 70 லட்சம் மதிப்புக்கு A.பாஸ்கர் உரிமையாளர், AB எலக்ட்ரிகல்ஸ் என்ற ஆணையரின் பினாமிக்கு பணி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பாதாள சாக்கடை பணி பழைய ஒப்பந்ததாரர் மாதம் ரூபாய் 15 லட்சத்திற்கும் குறைவாக செய்ததை, புதிய ஒப்பந்ததாரருக்கு மாதம் ரூபாய் 30 லட்சத்துக்கும் கூடுதலாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி வழங்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த ஒரு மாதத்திற்குள் 50 லட்சம் மதிப்புள்ள 2 பணிகள் ரூபாய் ஒரு கோடிக்கு ஆன்லைனில் டெண்டர் பதிவேற்றாமல் ஆணையரின் பினாமியான ABஎலக்ட்ரிகல்ஸ், கோயம்புத்தூர் உரிமையாளர் A. பாஸ்கர் அவர்களுக்கு பணி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும் 2018 கஜா புயல் சமயத்திலிருந்து இன்று வரை பணி செய்த 10 எண்ணிக்கையிலான ஒப்பந்த பணிகளுக்கு வரவேண்டிய மொத்த நிலுவைத்தொகை ரூபாய் 75 லட்சத்து 20 ஆயிரம் ஆகும். இதில் 5 ஒப்பந்தப்பணி தொகை 34 லட்சத்திற்கு மேலே கண்ட விவரப்படி வேலை உத்தரவு வழங்கப்பட்ட 2.7.2021 முதல் ஆணையர் பணி செய்ய வேண்டாம் என கூறிய 5.10.2021 வரை செய்து முடித்த பணிகளுக்கு அளவீட்டு புத்தகம் எழுதி பணம் கொடுக்கும் நடவடிக்கை எதுவும் செய்யவில்லை. மீதி உள்ள ஐந்து வேலை உத்தரவுகளுக்கான நாற்பத்தி ஒரு லட்சத்தி 20 ஆயிரத்துக்கு உண்டான பட்டியல் தொகை கடந்த 3 ஆண்டுகளாக தஞ்சாவூர் மாநகராட்சி கணக்குப் பிரிவில் நிலுவையில் உள்ளது. இது தொடர்பாக முதலமைச்சரின் குறை தீர்க்கும் பிரிவுக்கு அனுப்பப்பட்ட மனுக்களுக்கு 10.02.2022 அன்று மாநகராட்சி ஆணையர் தனகு அனுப்பிய கடிதத்தில் கோரிக்கை ஏற்கப்பட்டதாகவும், மாநகராட்சி நிதி நிலமைக்கு ஏற்ப தொடர்ந்து தொகை வழங்கப்படும் என்று கூறியிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட வேலைகளுக்கு பணி உத்தரவு வழங்குவதற்கு முன்பே, மன்ற அனுமதி நிர்வாக அனுமதி பெற்று பணிகளுக்கான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சியில் நிதி இல்லாதபோது பட்டியல்தொகையை சீனியாரிட்டி படி கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்காமல் சீனியாரிட்டியைக்கடந்து தனக்கு வேண்டப்பட்டவர் மற்றும் தனது பினாமி பாஸ்கர் ஆகியோருக்கு பட்டியல் தொகை வழங்கப்படுகிறது. மாநகராட்சி பொதுநிதி பணி எடுத்து செய்துவிட்டு 2018 முதல் பட்டியல் தொகைக்காக தான் காத்திருக்க 2021 பணிசெய்தவர்களுக்கு பட்டியல் தொகை வழங்கப்படுகிறது எனவும் தனக்கு சேரவேண்டிய பட்டியல் தொகை தொடர்பாக கடந்த 23.03.2022 அன்று தலைமைச்செயலாளர், முதன்மைச் செயலாளர், இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், மற்றும் மாநகராட்சி ஆணையர் ஆகியோருக்கு பதிவு அஞ்சல் அனுப்பியுள்ளதாகவும் 8.4.2022 அன்று முதன்மைச் செயலாளரிடம்

அளித்த மனுவும் அதற்கு பெறப்பட்ட பதிலும் இணைத்துள்ளார். கடந்த 26.05.2022 அன்று மாநகராட்சி ஆணையர் அவர்களை நேரில் சந்தித்து தனக்கு சேர வேண்டிய தொகை தொடர்பாக கேட்டபோது, ஆணையர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி தன்னை மிரட்டும் நோக்கத்தோடு காவல்துறைக்கு அழைப்பு செய்தார் எனவும் அதனால் அங்கிருந்து வந்து விட்டேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பாக 26.05.2022 அன்று முதலமைச்சர், தலைமைச்செயலாளர், முதன்மைச் செயலாளர், இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு மனு செய்துள்ளதாகவும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தொடர்பாக 4.6.2022 அன்று இயக்குநர் லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் கண்காணிப்பு அவர்களுக்கு மனு செய்துள்ளதாகவும் 21.06.2016 அன்று மாநகராட்சி தகவல் மையத்தில் 14 எண்ணிக்கையிலான மனுக்கள் அளிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். இதில் தான் செலுத்திய டெண்டர் முன்வைப்புத்தொகை தனது பட்டியலில் பிடித்தம் செய்த கூடுதல் முன்வைப்புத்தொகை மற்றும் தனது பட்டியலில் பிடித்தம் செய்த செயல்திறன் பாதுகாப்பு தொகை வழங்க கோரியிருந்ததாகவும், மேற்படி மனுக்கள் மீது எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் 20.05.2019 அன்று பதிவு அஞ்சல் மூலமும் மீண்டும் 17.7.2019 அன்றும் பதிவு அஞ்சல் மூலமும் 3.8.2020 அன்று RTI மனு ஒன்றும் அனுப்பியுள்ளதாகவும் மேலும் 22.08.2019 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றும் அனுப்பியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். 28.08.2020 அன்று மாநகராட்சியால் RTI மனு தொடர்பாக தகவல் அளித்திருந்தார்கள் என்றும் ஆனால் இன்றுவரை மேற்படி பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் வழங்கப்படவில்லை. மேலும் 16.5.2019 அன்று 39 எண்ணிக்கையிலான REFUND தொடர்பான மனுக்கள் மாநகராட்சி தகவல் மையத்தில் அளித்து இன்றுவரை நடவடிக்கை ஏதுமில்லை. ஆகவே உள்ளாட்சி அமைப்பு முறைமன்ற நடுவர் அவர்கள் தனது பட்டியல் தொகைகள் நாற்பத்தி ஒரு லட்சத்து ,இருபதாயிரம் கிடைக்க ஆவன செய்வதுடன், 2.7.2021 வேலை உத்தரவு வழங்கிய ரூபாய் 34 லட்சத்தில் பணி முடிந்த வகைகளுக்கு அளவீட்டு புத்தகம் எழுதி பணம் கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடுவதுடன் கடந்த 10 ஆண்டுகளில் தான் செலுத்திய டெண்டர் முன்வைப்புத்தொகை பட்டியலில் பிடித்தம் செய்த கூடுதல் முன்வைப்புத்தொகை மற்றும் செயல்திறன் பாதுகாப்பு தொகை இவற்றில் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை போக மாநகராட்சி பதிவேட்டில் உள்ள பாக்கி நிலுவை தொகைகளை கிடைக்க உதவுவதுடன் ஆணையரின் செயல்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவும் கோரியள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை கோரி தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ 26.07.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

3) முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவ 26.07.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 23.08.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 23.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"தஞ்சாவூர் மாநகராட்சியில் பதிவு பெற்ற மோட்டார் பழுது பார்க்கும் ஒப்பந்ததாரராக 10 ஆண்டு காலமாக நான் பணி செய்து வருகிறேன். அம்மாநகராட்சியில் ரூபாய் 41,20,000/—க்கு மோட்டார் பழுது பார்த்தல் பணி மற்றும் குடிநீர் குழாய் பழுதுபார்த்தல் ஆகிய 6 ஒப்பந்தப்பணிகள்

என்னால் மேற்கொள்ளப்பட்டது. 2018ல் செய்து முடிக்கப்பட்ட மேற்கண்ட பணிகளுக்கான தொகை ரூபாய் 41.20 இலட்சம் இன்னும் மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. அதேபோன்று 2021ல் என்னால் செய்து முடிக்கப்பட்ட மோட்டார் பழுது பார்க்கும் பணி மற்றும் குடிநீர் குழாய் பழுதுபார்க்கும் பணி ஆகிய 5 பணிகளுக்கான தொகையாக ரூபாய் 34 லட்சம் இன்னும் மாநகராட்சியால் எனக்கு அளிக்கப்படவில்லை. மேற்கண்ட 34 லட்சம் ரூபாய்க்கான பணிகளில் 90% முடிக்கப்பட்ட நிலையில், புதிதாக மாநகராட்சி ஆணையராகப்பொறுப்பேற்றுக்கொண்ட திரு. சரவணகுமார் என்பவர் மேற்கண்ட பணிகளை நிறுத்துமாறு வாய்மொழியாக எனக்கு தெரிவித்தார். மேற்கண்ட 90 சதவீத முடிக்கப்பட்ட பணிகளில் எவ்வித குறைபாடும் இல்லாத நிலையில் மேற்கண்ட 5 பணிகளையும் செய்யவிடாமல் நிறுத்திவிட்டனர். இப்பணிகள் அளவீட்டுப்புத்தகத்தில் எழுதி பட்டியல் தொகை வழங்காமல் மாநகராட்சியால் என்னை அலைகழித்து வருகின்றனர். ஆனால், எனக்கு பின்னர் மேற்கண்ட அதேபோன்ற பணிகளுக்காக டெண்டர் எடுத்த நபர்களுக்கெல்லாம் அவர்களுக்கு சேரவேண்டிய தொகை மாநகராட்சியால் அளிக்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இது தொடர்பாக தலைமைச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, கூடுதல் தலைமைச் செயலர், நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோருக்கு புகார் மனுக்கள் என்னால் அனுப்பப்பட்டும், அப்புகார் மனுக்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட தொகையை எனக்கு வழங்காமல் நிறுத்திவிட்ட நிலையில் மேற்கண்ட அதே பணிகளுக்காக புதிதாக 50 லட்சம் ரூபாய்க்கு எவ்வித டெண்டர் விதிமுறைகளையும் பின்பற்றாமல் டெண்டர் விடப்பட்டு, மேற்கண்ட டெண்டர் மாநகராட்சி ஆணையருக்கு வேண்டப்பட்ட பாஸ்கர் என்கிற நபருக்கு விடப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட சூழ்நிலையில் எனக்கு சேர வேண்டிய நிலுவைத்தொகை, முன்வைப்புத்தொகை, பட்டியலில் பிடித்தம் செய்த கூடுதல் முன்வைப்புத்தொகை மற்றும் செயல்திறன் பாதுகாப்புத் தொகை ஆகியவற்றை மாநகராட்சியால் வழங்கிட ஆவன செய்யும்படி இம்முறைமன்றத்தை வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது 27.6.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும், இன்று (23.08.2022) நடைபெற்ற நேரடி விசாரணையில் என்னால் அளிக்கப்படும் எனது 23.8.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது கூடுதல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான ஒப்பந்த நகல்கள் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கான புகைப்படங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) மனுதாரர் தனது 23.08.2022 நாளிட்ட கடிதத்திலும் மோட்டார் பழுது பார்த்தல் பணி மற்றும் குடிநீர் குழாய் பழுது பார்த்த வகையில் 2018 முதல் நிலுவையில் உள்ள ரூ.41,20,000/– வழங்காததற்கும் 2021ல் பணி செய்த ஐந்து பணிகளுக்கு ரூபாய் 34 லட்சம் வழங்காதது தொடர்பாகவும் பல்வேறு அலுவலர்களுக்கும் மனுச்செய்துள்ளதையும், இப்பொருள் தொடர்பாகவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி தகவல் கோரியதற்கும் பொதுத்தகவல் அலுவலர் பிரிவு 7(9) ஐ பயன்படுத்தி தகவல்களை தர மறுத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் செய்த ஒப்பந்த பணிக்கு தொகை கொடுக்க நிதி இல்லாத மாநகராட்சி நிர்வாகம் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு 50 லட்சம் ரூபாய்க்கு டெண்டர் விட்டுள்ளனர் எனவும் தஞ்சாவூர் மாநகராட்சியின் டெண்டர் பதிவேடு, பட்டியல் தொகை வழங்கப்பட்ட பதிவேடு ஆகியவற்றை ஆய்வு செய்தால் கடந்த ஒரு வருடத்தில் திரு A.பாஸ்கர் என்பவருக்கு இ.டெண்டர் கோரப்படாமல் வழங்கப்பட்ட டெண்டர் மற்றும் சீனியாரிட்டியை கடந்து பட்டியல் தொகை வழங்கப்பட்ட உண்மை தெரியவரும் எனவும் 23.10.2021 அன்று முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு எழுதிய மனுவில் குறிப்பிடப்பட்ட தொகை அன்றைய தேதியில் நிலுவையில் இருந்தது என்பதையும், 08.04.2022 அன்று முதன்மை செயலாளரிடம் மனு செய்த போது குறிப்பிடப்பட்ட தொகை அன்றைய தேதியில் நிலுவையில் இருந்தது என்பதையும், தற்போது குறிப்பிடப்பட்டுள்ள தொகை இன்றைய தேதியில் நிலுவையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே கனம் முறைமன்ற நடுவர் அவர்கள் விசாரித்து எனக்கு சேர வேண்டிய டெண்டர் முன்வைப்புத்தொகை மற்றும் கூடுதல் முன்வைப்புத்தொகை, பட்டியலில் பிடித்தம் செய்த செயல் திறன் பாதுகாப்பு தொகை உள்ளிட்ட அனைத்து தொகைகளையும் பெற்றுத்தர கோருகிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) 23.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் தஞ்சாவூர் மாநகராட்சியின் செயற்பொறியாளர் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" தஞ்சாவூர் மாநகராட்சியில் மோட்டார் பழுது பார்க்கும் பணி மற்றும் குடிநீர் குழாய் பழுது பார்த்தல் தொடர்பாக 5 பணிகளை மேற்கொள்ள தஞ்சாவூரைச் சேர்ந்த பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திரு.சுதாகர் என்பவருக்கு கடந்த 2018ல் பணி ஆணை வழங்கப்பட்டது. பணியின் மொத்த மதிப்பீடு 41.20 லட்சமாகும். அதேபோன்று மேலும் 5 பணிகளை ரூபாய் 34 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அவருக்கு 2.7.2021 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட பணிகள் முழுவதுமாக முடிக்கப்படாததால், அவருக்கு மேற்கண்ட தொகை வழங்கப்படவில்லை.

ஆனால், மேற்கண்ட ஒப்பந்ததாரர் திரு.சுதாகர் தஞ்சாவூர் மாநகராட்சியில் மேற்கொண்ட வெவ்வேறு ஒப்பந்தப் பணிகளுக்கான தொகை கீழ்க்கண்டவாறு காசோலையாக அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2018–19 | ரூ. 41,18,673/– |
| 2019–20 | ரூ. 45,39,812/– |
| 2020–21 | ரூ. 22,86,000/– |
| 2021–22 | ரூ. 9,00,000/– |

ஆக மொத்தம் 1,18,44,485/– ரூபாய் மேற்கண்ட ஒப்பந்ததாரர் மாநகராட்சியில் மேற்கொண்ட பணிகளுக்காக மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை தெரிவித்துக்கொள்கிறேன். அதேப்போன்று அவருக்கு திருப்பி அளிக்கப்பட்ட முன் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையாக மொத்தம் ரூபாய் 5,76,561/– அளிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட தொகையை காசோலையாக மனுதாரருக்கு அளிக்கப்பட்டதன் நாள் வாரியான விவரங்கள் அடங்கிய பட்டியலை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி முறையாக கோரப்பட்டு, அதற்கான அறிவிப்புகள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டும்,

தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டும். ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன. அதேபோன்றுதான் மனுதாரர் அவரது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு அளித்துள்ள முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. பாஸ்கர் என்கின்ற ஒப்பந்ததாரருக்கு, ரூபாய் ஐம்பது லட்சத்திற்கான ஒப்பந்தப்புள்ளி வழங்கியதில் எவ்வித ஒளிவுமறைவின்றியும், ஒப்பந்த வழிகாட்டுதல்களின்படியும், Tamillnadu Tender Transparency Actன் படியும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்கண்ட பாஸ்கர் என்பவருக்கு வழங்கப்பட்டது. இதில் எவ்வித சட்டவிதிகளும் மீறப்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட திரு.பாஸ்கர் என்பவர் மேற்கொண்ட பணிகளுக்காக 7.4.2022 அன்று திரு.பாஸ்கர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட ரூபாய் 11,58,334/–க்கான பட்டியல் விவரங்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் 22.08.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 22.08.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தஞ்சாவூர் மாநகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு. V.சுதாகர் ஒப்பந்தப்பணிகள் மேற்கொண்ட வகையில் 01.04.2018 முதல் 31.03.2021 வரை அவருக்கு வழங்கப்பட்ட காசோலைகள் விவரம் அனைத்தும் நாள் வாரியாக பட்டியல் சமாப்பிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அதற்கான அறிவிப்புகள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலமாக பதிவேற்றம் செய்யப்படுகிறதே தவிர எந்தவித ஒளிவுமறைவுமின்றி ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளும் நிறுவனங்கள் தகுதி, அனுபவம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை இதன் அடிப்படையில் ஒத்திசைவு செய்யப்பட்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளி மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டு அனுமதி பெற்ற பின்பு வேலை உத்தரவு வழங்கப்படுகிறது. அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொகை வழங்கப்படுகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள வைப்புத்தொகை திரும்ப வழங்குவது தொடர்பான மனுக்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

திரு. V. சுதாகர் அளித்த மனுவின் மீது இம்மாநகராட்சியில் அறிக்கை மேற்கண்டவாறு அளிக்கப்படுகிறது. மனுதாரர் தனது மனுவில் ஆதாரம் ஏதுமின்றி தவறான தகவல்கள் அனைத்தையும் புகாராக தெரிவித்துள்ளார். இப்புகார்கள் அனைத்தும் மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் தன்னுடைய சுயலாபத்திற்காகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது என்ற விபரம் இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

8) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், மற்றும் அவரது 23.08.2022 நாளிட்ட கடிதம் மற்றும் அத்துடன் பெறப்பட்ட ஆவண நகல்கள், தஞ்சாவூர் மாநகராட்சி செயற்பொறியாளர்

அவர்களின் வாக்குமூலம் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவண நகல்கள் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் பின்வரும் விபரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

9) இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் திரு. V. சுதாகர் தான் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு செய்த வேலைக்கு மாநகராட்சியால் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை, முன்வைப்புத் தொகை, பட்டியலில் பிடித்தம் செய்த கூடுதல் முன்வைப்புத் தொகை மற்றும் செயல்திறன் பாதுகாப்புத் தொகை ஆகியவற்றை மாநகராட்சியால் வழங்கிட ஆவன செய்யும்படியும் ஆணையரின் செயல்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவும் இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் மோட்டார் பழுதுபார்த்தல் பணி மற்றும் குடிநீர் குழாய் பழுதுபார்த்த வகையில் 2018 முதல் ஆறு பட்டியல்களுக்கு ரூபாய் 41,20,000/- வழங்காததற்கும் 2021ல் பணி செய்த ஐந்து பணிகளுக்கு ரூபாய் 34 லட்சம் அளவீட்டு புத்தகம் எழுதி பட்டியல் தொகை வழங்க தொடர் நடவடிக்கை எடுக்காததற்கும், 2012 முதல் 2021 வரை அவர் செலுத்திய டெண்டர் முன்வைப்பு தொகை பட்டியலில் பிடித்தம் செய்த கூடுதல் முன்வைப்புத் தொகை, மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்த செயல்திறன் பாதுகாப்பு தொகை மாநகராட்சி பதிவேட்டின்படி அவரது கணக்கில் சேர வேண்டிய நிலுவை தொகை தொடர்பாக பலமுறை மாநகராட்சிக்கு மனுக்கள் அளித்துள்ளார்.

மனுதாரர் தஞ்சாவூர் மாநகராட்சியால் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பணி செய்து வருகிறார். 5.10.2021 அன்று ஆணையர் மனுதாரரை நேரில் அழைத்து வாய்மொழியாக பணி செய்ய வேண்டாமென கூறியதால் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே பணி தொடர்பான புகார் ஏதும் இல்லாத போதே எந்தவிதமான அறிவிப்பும் கொடுக்காமல் ஆணையர் வாய்மொழி உத்தரவின் மூலமாக பணிசெய்ய வேண்டாம் என்று கூறியதால் மேற்கொண்டு பணி எதுவும் செய்யவில்லை எனவும், மனுதாரருக்கு 5.10.2021 வரை செய்து முடித்த பணிகளுக்கு அளவீட்டு புத்தகம் எழுதி பணம் கொடுக்கும் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் மனுதாரரின் வாக்குமூலத்தின் மூலம் தெளிவாகிறது.

மாநகராட்சியில் நிதி இல்லாத போது பட்டியல் தொகையை சீனியாரிட்டிபடி கொடுக்காமல் திரு. பாஸ்கர் உள்ளிட்ட மற்றவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதும் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து பணி எடுத்து செய்துவிட்டு 2018 முதல் பட்டியல் தொகைக்காக மனுதாரர் காத்திருக்க 2021ல் பணி செய்தவர்களுக்கு பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளதையும் ஆவணங்கள் மூலம் தெளிவாகிறது.

மனுதாரர் 23.3.2022 அன்று தலைமைச் செயலர், முதன்மைச் செயலர், இயக்குநர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் மாநகராட்சி ஆணையருக்கும் நிலுவைத் தொகை தொடர்பாக மனு அளித்துள்ளார். மேலும் 8.4.2022 அன்று முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளுக்கும் மனுதாரர் மனு அளித்துள்ளார்.

26.5.2022 அன்று மனுதாரர் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரை நேரில் சந்தித்து தனக்கு சேரவேண்டிய தொகை தொடர்பாக கேட்டபோது ஆணையர் மனுதாரரை மிரட்டும் நோக்கத்தோடு காவல்துறைக்கு அழைப்பு செய்துள்ளதாகவும், இது தொடர்பாகவும் மனுதாரர் 26.5.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர், தலைமைச் செயலர், முதன்மைச் செயலர், இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு மனு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். செய்து முடிக்கப்பட்ட வேலைக்குண்டான தொகையை வழங்குவதற்கு மனுதாரரை இவ்வாறு அலைகழிக்கும் மாநகராட்சி ஆணையரின் இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மனுதாரர் திரு.V. சுதாகருக்கு 2.7.2021 அன்று மோட்டார் பழுது பார்க்கும்பணி மற்றும் குடிநீர் குழாய் பழுது பாா்ப்பது தொடர்பாக 5 பணிகளுக்கு ரூ. 34 லட்சம் மதிப்பீட்டில் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மன்றப்பொருள், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் வேலை உத்தரவு போன்ற அனைத்து ஆவணங்களிலும் பணி மேற்கொள்ள வேண்டிய காலம் மற்றும் பணி முடிவடையும் காலம் போன்றவை குறிப்பிடப்படாமல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் வேலை உத்தரவு வழஙகப்பட்டுள்ளது என்பது விசாரணையின் மூலமும் ஆவணங்களின் மூலமும் தெரிய வருகிறது. பணி மேற்கொள்ள வேண்டிய காலத்தை குறிப்பிடாமல் வேலை உத்தரவு வழங்கி உள்ளது மிகவும் தவறான செயலாகவே இம்முறைமன்றம் கருதுகிறது. இதனை பயன்படுத்தியே ஆணையர் வாய்மொழியாக பணியை நிறுத்துமாறு தெரிவித்துள்ளது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. மேற்கண்ட 34 லட்சம் ரூபாய்க்கான பணிகளில் 90% முடிக்கப்பட்டுள்ள நிலையில் மாநகராட்சி ஆணையர் திரு. சரவணகுமார் மேற்கண்ட பணிகளை நிறுத்துமாறு வாய்மொழியாக மனுதாரருக்கு தெரிவித்துள்ளார். 90 சதவீத முடிக்கப்பட்ட பணிகளில் எவ்வித குறைபாடும் இல்லாத நிலையில் மேற்கண்ட 5 பணிகளையும் நிறுத்தி விட்டனர். இப்பணிகள் அளவீட்டு புத்தகத்தில் எழுதி பட்டியல் தொகை வழங்காமல் பின்னர் மேற்கண்ட அதே போன்ற பணிகளுக்காக டெண்டர் எடுத்த நபர்களுக்கெல்லாம் அவர்களுக்கு சேரவேண்டிய தொகை அளிக்கப்பட்டுள்ளதை மனுதாரரின் வாக்குமூலத்திருந்தது அறிய முடிகிறது. மேலும் மேற்கண்ட தொகை வழங்கப்படாத நிலையில் அதே பணிகளுக்காக புதிதாக ரூபாய் 50 லட்சத்திற்கு திரு.பாஸ்கர் அவர்களுக்கு வேலை உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு. சுதாகர் தஞ்சாவூர் மாநகராட்சியில் மேற்கண்ட வெவ்வேறு ஒப்பந்தப் பணிகளுக்கான தொகை கீழ்கண்டவாறு காசோலையாக மாநகராட்சியால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.

| | |
|---|---|
| 2018–2019 | ரூ. 41,18,673/– |
| 2019–2020 | ரூ. 45,39,812/. |
| 2020–2021 | ரூ. 22,86,000/– |
| 2021–2022 | ரூ. 9,00,000/– |

ஆகமொத்தம் ரூ.1,18,44,485/– வழங்கப்பபட்டுள்ளது. மேலும் அவருக்கு திருப்பி அளிக்கப்பட்ட முன்வைப்புத்தொகை மற்றும் கூடுதல்வைப்புத்தொகையாக ரூ.5,76,561/– ளிக்கப்பட்டுள்ளதையும் மாநகராட்சி சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது.

இருப்பினும், மனுதாரர் திரு.சுதாகர் அவர்களுக்கு 02.07.2021 அன்று 5 பணிகளுக்கான தொகையான ரூபாய் 34 லட்சம் மதிப்பீட்டில் பணிகளில் பணி முழுவதுமாக முடிக்கப்படாததால் அவருக்கு மேற்கண்ட தொகை வழங்கப்படவில்லை என்று தஞ்சாவூர் மாநகராட்சி செயற்பொறியாளர் அவரது வாக்குமூலத்தில் எவ்வித ஆதார ஆவணங்களயும் சமர்ப்பிக்காமல் தெரிவித்துள்ளார். மனுதாரரால் 90 சதவீதம் முடிக்கப்பட்ட மேற்கண்ட பணிகளில் எவ்வித குறைபாடும் இல்லாத நிலையில் அந்தப்பணிகள் நிறுத்தப்பட்டு அந்தப்பணிகள் அளவீட்டுப்புத்தகத்தில் எழுதி பட்டியல் தொகை வழங்கப்படவில்லை என்பதும் தெள்ளத்தெளிவாக தெரிகிறது.

மனுதாரருக்கு ரூ.41.20 லட்சமும், 02.07.2021 வழங்கப்பட்ட பணிகளுக்கான தொகை ரூ.34 லட்சமும் நாளது தேதி வரையில் நிலுவையில் உள்ளது. மேலும் மனுதாரருக்கு 12.01.2022 அன்று ரூபாய் 9 லட்சம், 2021–22ல் வழங்கப்பட்டுள்ளதை ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது. அதன்பிறகு எந்த நிலுவைத்தொகையையும் மனுதாரருக்கு மாநகராட்சியால் வழங்கப்படவில்லை. ஆனால் 17.12.2021 அன்று AB எலக்ட்ரிக்கல்ஸ், உரிமையாளர் A. பாஸ்கருக்கு வழங்கப்பட்ட ரூபாய் 50 லட்சத்திற்கான வேலை உத்தரவுக்கு 07.04.2022 அன்று அவர்களுக்கு ரூ.11,58,334/– வழங்கப்பட்டுள்ளதையும் ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. திரு.பாஸ்கர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்ட நான்கு மாதங்களில் அவருக்கு ரூ.11,58,334/– வழங்கப்பட்டுள்ளதிலிருந்து மாநகராட்சி அலுவலர்களின் பாரபட்சதன்மையை காண்பிக்கிறது. மனுதாரர் தமக்கு அளிக்கப்பட்ட ஒப்பந்தப்பணியினை முடித்துவிட்ட நிலையில் அவருக்கு அளிக்கப்பட வேண்டிய பணிநிறைவறிக்கை மற்றும் அவருக்கு இதுகாறும் நிலுவையில் உள்ள தொகைகளை வழங்காமல் காலம் தாழ்த்தியது வேண்டுமென்றே திட்டமிட்டு செய்த செயலாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

வேண்டுமென்றே காலதாமதத்தை ஏற்படுத்தி உள்ளதுடன் நிலுவைத்தொகையினை விதிகளுக்குட்பட்டு அளிக்காமல் இருக்கும் சம்மந்தப்பட்ட அத்தனை மாநகராட்சி அலுவலர்கள் மீதும் நடைமுறையில் உள்ள உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகையினை விதிகளுக்குட்பட்டு தாமதமின்றி வழங்கிட தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியும் ஆணையிடுகிறது.

மேலும் நகராட்சி ஆணையர்கள் ஒப்பந்தப்பணிகள் நிறைவு பெற்றவுடன் அதற்கான தொகையை காலதாமதமின்றி ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டுமென நகராட்சி நிர்வாக இயக்குநர் தெளிவான சுற்றறிக்கை ஒன்றை அனுப்பக் கோரப்படுகிறார்.

Abuse and misuse of discretionary powers vested with any official authority are to be strictly avoided. The Head of the Organisation of any urban local body has to go by principles and standard practices within the purview of didactic conduct, forthright transparency, impartial neutrality and absolute objectivity. In this particular case no negative observations about the works executed by the petitioner have been made.

Hence the Corporation Commissioner is directed to settle the dues payable to the petitioner within a time frame. The DMA is instructed to monitor the payment by the Thanjavur Corporation Commissioner without dragging on the issue to the detriment of the petitioner.

2022-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.V. சுதாகர்,
   மனை எண்.63, திருப்பதி நகர்,
   சுந்தரம் நகர் விரிவு,
   எம்.சி.ரோடு,
   தஞ்சாவூர் – 613 004.

2. ஆணையர்,
   தஞ்சாவூர் மாநகராட்சி,
   தஞ்சாவூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

4. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

19/9/22

செயலாளர்.